<u>முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருப்பூர்</u>

அசல் வழக்கு எண். 9/2019

இன்று 2025 ம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 09 ம் நாள் இன்று இந்த பி.வா.சா.1ன் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு.A.வனிதா, M.S.W., L.L.B., அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : ஈஸ்வரன் | தொழில் | : |
| தகப்பனார் பெயர் / கணவர் பெயர் | : | கிராமம் | : |
| வயது | : | தாலூக்கா | : |
| நாள் | : 09-02-2026 | மாவட்டம் | : திருப்பூர் |

<u>சாட்சி மீண்டும் முன்னிலையாகி சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை :</u>

1. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.4 ஆவணவத்தில் உள்ளது தான் தாவா தடம் என்பது தான் என்றால் சரிதான். அதற்காக தான் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதில் முதல் புகைப்படம் தாவா சொத்து என்றால் சரிதான். இரண்டாவது புகைப்படம் பிரதிவாதி சொத்துக்குள்ள செல்லும் தடம் என்றால் சரிதான். தாவா சொத்திற்கான தாவா பாதையை எனது சகோதரி அடைத்துவிட்டாள் என்றால் சரியல்ல. நான் முருங்கை தோட்டத்தில் தான் குடியிருந்து வருகிறேன் என்றால் சரிதான். 45 வருடமாக அங்கு தான் குடியிருந்து வருகிறேன் என்றால் சரிதான்.

2. தாவா சொத்தில் உள்ள தடம் க.ச.254 வழியாக செல்கிறது என்றால் சரிதான். க.ச.254ல் உள்ள தடத்தை தான் அனைவரும் பயன்படுத்தி வருகிறார்கள் என்றால் சரிதான். 254 காலையில் வடகிழக்கில் பழைய பூர்விக வீட்டு உள்ளது என்றால் சரிதான். அந்த வீட்டிற்கு 254 காலை தடம் உள்ளது என்றால் சரிதான். ஆனால் தாவா தடம் தான் மாமுல் தடம். 254 யில் உள்ள தடத்தை காண்பித்து தான் எனது மக்களுக்கு பிரித்துக் கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். தாவா தடத்தை மாமுல் தடம் என்று சொன்னால் சரியல்ல.

3. எனது பாட்டனார் கருப்பக கவுண்டருக்கு எவ்வளவு மகன்கள் என்றால் எனக்கு தெரியாது. எனக்கு பூர்விகமாக வடபுற காலையில் என்ன பூமி உள்ளது

என்றால் எனக்கு தெரியாது. அதன் கிழபுற என்ன காலை உள்ளது என்றால் எனக்கு தெரியாது. எனது பூமிக்கு கிழபுறமாக உள்ள மேற்காலை தோட்டம் என்றால் தெரியாது. வழக்கு சொத்தானா தடமானது பூச்ச காடு என்றால் எனக்கு தெரியாது. எனது க.ச 254 காலையில் பூமி பாத்தியப்பட்டது என ஏதேனும் ஆவணம் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் நான் தாக்கல் செய்துள்ளேன். அந்த ஆவணத்தின் எண் என்ன என்றால் தெரியாது. வழக்குக்காக பொய் செல்கிறேன் என்றார் சரியல்ல, நான் எந்த ஆவணத்தையும் தாக்கல் செய்யவில்லை என்றால் எனக்கு தெரியாது.

சாட்சி கூறியபடி என் வாய்மொழிப்படி தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்துப் பெறப்பட்டது.

VANITHA Digitally signed by VANITHA Date: 2026.02.09 17:59:26 +1100

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி
திருப்பூர்.